විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

MINISTRY OF FOREIGN AFFAIRS, FOREIGN EMPLOYMENT AND TOURISM

ஊடக வெளியீடு

அன்டிகுவா மற்றும் பார்பியூடாவில் நடைபெறவுள்ள 2026 பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டில் (CHOGM 2026) இலங்கை தூதுக்குழுவிற்குப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமை

அன்டிகுவா மற்றும் பார்பியூடாவின் செயின்ட் ஜோன்ஸில், 2026 நவம்பர் 1 முதல் 4 வரை நடைபெறவுள்ள 28-வது பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டில் (CHOGM 2026) பங்கேற்கவுள்ள இலங்கைத் தூதுக்குழுவிற்குப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமை தாங்கவுள்ளார்.

"செழுமைமிக்க பொதுநலவாயத்திற்காகக் கூட்டாண்மைகளையும் முதலீடுகளையும் துரிதப்படுத்துதல்" (Accelerating Partnerships and Investment for a Prosperous Commonwealth) என்ற கருப்பொருளின் கீழ், பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 56 நாடுகளின், அரசாங்க மற்றும் நாட்டுத் தலைவர்களுடன் பிரதமர் இணைந்து கொள்வார்.

இந்த உச்சிமாநாட்டின் போது, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டின் நிறைவேற்று அமர்வுகள் மற்றும் தலைவர்களுக்கான கலந்துரையாடல் அமர்வுகளில் பங்கேற்பார். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் முதலீடு, டிஜிட்டல் மாற்றம், இளைஞர் வலுவூட்டல், காலநிலை மாற்றம் மற்றும் நற்பரிபாலனம் உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து இலங்கைத்தரப்பு தனது நிலைப்பாடுகளையும், முன்னுரிமைகளையும் முன்வைக்கும்.

உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, இலங்கையின் இராஜதந்திர, வர்த்தக மற்றும் அபிவிருத்தி கூட்டாண்மைகளை மேம்படுத்துவதற்காக, பிரதமர் கலாநிதி அமரசூரிய பல நாட்டுத் தலைவர்கள், அரசாங்கத் தலைவர்கள் மற்றும் பிற அரசியல், வணிகத் தலைவர்களுடன் இருதரப்பு சந்திப்புகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளார்.

மேலும், முதலீடு சார்ந்த அபிவிருத்தி, பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் உலகளாவிய சுகாதார ஒத்துழைப்பு ஆகியவற்றில் இலங்கையின் முன்னுரிமைகளையும், கண்ணோட்டங்களையும் எடுத்துரைக்கும் வகையில், பிரதமர் பொதுநலவாய மகளிர் மன்றம், பொதுநலவாயத் தலைவர்கள் மற்றும் சி.இ.ஓ.க்கள் முதலீட்டு உச்சிமாநாடு மற்றும் உலகளாவிய கண் சுகாதார உச்சிமாநாடு ஆகியவற்றில் உரையாற்றவுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு
மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

கொழும்பு 01

2026 அக்டோபர் 31

Foreign Affairs
විදේශ කටයුතු
வெளிநாட்டு அலுவல்கள்

Republic Building, Colombo 1
ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1
குடியரசுக் கட்டிடம், கொழும்பு 1

☎ 2 325 373/5, 2 207 200/7 ✉ cypher@mfa.gov.lk

Foreign Employment
විදේශ රැකියා
வெளிநாட்டு வேலைவாய்ப்பு

17th Floor, "Mehewara Piyesa", Narahenpita, Colombo 5
17 වන මහල, "මෙහෙවර පියස", නාරාහේන්පිට, කොළඹ 5
17ஆவது தளம், "மெஹெவர பியச",நாரஹேன்பிட்டி, கொழும்பு 5

☎ 2 331 200 ✉ info@mfe.gov.lk

Tourism
සංචාරක
சுற்றுலாத்துறை

No 03, Times Building, Bristol Street (Sir Razik Fareed Mw), Colombo 1
අංක 03, ටයිම්ස් ගොඩනැගිල්ල, බ්‍රිස්ටල් වීදිය (සර් රාසික් ෆරීඩ් මාවත), කොළඹ 1
இல.03,டைம்ஸ் கட்டிடம், பிரிஸ்டல் தெரு(சர் ராசிக் ஃபரீத் மாவத்தை),கொழும்பு 1

☎ 2 381 798, 2 321 222 ✉ secretary@tourismmin.gov.lk